**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை –600006.**

**ந.க.எண்.003775/இ/இ1/2023, நாள் 05.06.2023**

**பொருள்** பள்ளிக் கல்வி – உறுதிமொழி – 12.06.2023 அன்று அனுசரிக்கப்படவுள்ள உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தன்று உறுதிமொழி மேற்கொள்ள கோருதல் – தொடர்பாக.

**பார்வை** சென்னை–06, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் கடித எண்.ட்டி1/12491/2023, நாள்.22.05.2023.

*****

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

இணைப்பு – கடிதம் மற்றும் உறுதிமொழி

ஒம்/–வெ.ஜெயக்குமார்
இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

**பெறுநர்**
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
(மின்னஞ்சல் வழியாக)

003775/2023

028751

## தொழிலாளர் துறை

**அனுப்புநர்**

முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் /
தொழிலாளர் ஆணையர்,
சென்னை–6.

**பெறுநர்**

இயக்குநர்,
பள்ளி கல்வி இயக்குநரகம், டி.பி.ஐ.
வளாகம், கல்லூரி சாலை, சென்னை – 6.

**கடித எண். ட்டி1/ 12491 /2023, நாள்.22.05.2023**

30 MAY 2023

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்:** குழந்தைத் தொழிலாளர் – 12.06.2023 அன்று அனுசரிக்கப்படவுள்ள உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தன்று உறுதிமொழி மேற்கொள்ள கோருதல் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (பல்வகை) எண்.9, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை நாள்.01.02.2005.

*****

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12–ம் தேதி, உலக அளவில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதனையொட்டி பார்வையில் காணும் அரசாணையில் அனைத்து பள்ளிகள், அலுவலகங்கள், அரசு துறைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களிலும் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழியினை எடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இவ்வருடம் 12.06.2023 (திங்கள் கிழமை) அன்று முற்பகல் 11.00 மணிக்கு, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழியினை, அலுவலகத்தில் தங்கள் தலைமையின் கீழ் அனைத்து பணியாளர்களும் எடுத்துக் கொள்ளுமாறும், தங்கள் சார்நிலை அலுவலர்கள் அனைவரையும் மேற்படி உறுதிமொழியினை எடுக்க கோருமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**இணைப்பு: உறுதிமொழி படிவம்**

22/05/2023

முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையருக்காக

# குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான

# உறுதிமொழி

"இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமார உறுதி கூறுகிறேன்.